தினமணி
சந்தா குறித்த விவரம் மற்றும் புகார்களுக்கு...

சேலம்
மேட்டூர்
சங்ககிரி
எடப்பாடி : 95666 11366
ஏற்காடு
ஆத்தூர் : 99946 46385
தருமபுரி : 84896 34827
உதவி மைய எண் : 88070 00218

தினமணி
எமது செய்தியாளர்களை தொடர்பு கொள்ள...

சேலம்	98405 90012
ஓமலூர்	94433 93373
மேட்டூர்	94432 23065
ஏற்காடு	94432 01447
சங்ககிரி	94434 14850
ஆத்தூர்	93642 22063
தம்மம்பட்டி	94434 71248
எடப்பாடி	98659 77117
வாழப்பாடி	96009 69118
ஆட்டையாம்பட்டி	94892 94473

IDBI BANK

ஐடிபிஐ வங்கி லிட்
எண்.72, மே ஃபிளவர் 'E' கேஸில்,
டாக்டர் பாலசுந்தரம் ரோடு, அவினாசி ரோடு அடுத்து,
ATT காலனி, கோயம்புத்தூர்-641 018.
இணையதளம் : www.idbi.bank.in, CIN:L65190MH2004GOI148838

அசையாச் சொத்தின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு. ஐடிபிஐ வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய **ரூ.46,06,311/- (01.09.2026 தேதி அன்று)** தொகையை **திரு. P.மூர்த்தி மற்றும் திருமதி. M.ருக்குமணி,** என்பவர்களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/அடுவைக்கப்பட்ட, **ஆக்கபூர்வ சுவாதீனம் (Constructive Possession)** செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை, **18.11.2026** தேதியில் **(காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை)** விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் **'உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு மற்றும் உள்ள இடத்தில் உள்ளவாறு'** என்ற அடிப்படையில் விற்கப்படும். குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை : **ரூ.1,06,00,000/-** மற்றும் முன்வைப்புத் தொகை : **ரூ.10,60,000/-.**

அசையாச் சொத்து விபரம்

சேலம் மாவட்டம் - 636 104, வாழப்பாடி தாலுகா மற்றும் யூனியன், சந்திரபிள்ளை வலசு பஞ்சாயத்து மற்றும் கிராமம், நடுப்பட்டி, வடக்குக்காடு, சர்வே எண்.26/2 ல் உள்ள 98 சென்ட் நிலம் மற்றும் அங்கு கட்டப்பட்ட (கட்டிடப் பரப்பு - 1,202 சதுரடி) கதவு எண்.259 கட்டிடம் கூடிய குடியிருப்புச் சொத்து.

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு www.baanknet.com மற்றும் பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் www.idbi.bank.in இணையதளத்தில் 'லிங்க்'கில் பார்வையிடலாம்.

தேதி : 28.09.2026 ஒம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : கோயம்புத்தூர் ஐடிபிஐ வங்கி லிட்

பொது அறிவிப்பு

மாண்பமை முதன்மை அமர்வு நீதிபதி மற்றும் நியமனச் சிறப்பு நீதிமன்றம் முன்னிலையில், PMLA வழக்குகள், சென்னை

Crl.M.P.எண் 24854/2024 / இந்தியன் வங்கி,
பிரதிநிதித்துவப்படுத்துபவர் இதன் கிளை மேலாளர், SAM கிளை, 1ஆவது தளம், கார்மல் கார்டன் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி அருகில், புலியகுளம் முதன்மைச் சாலை, கோயம்புத்தூர் - 641045. ...மனுதாரர்

எதிர்

அமலாக்க இயக்குநரகம், பிரதிநிதித்துவப்படுத்துபவர் இதன் உதவி இயக்குநர், சென்னை மண்டல அலுவலகம் - II, இந்திய அரசு, எண் 16, 3ஆவது தளம், டவர்-II, BSNL கட்டடம், கிரீம்ஸ் சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை - 600006.
...1 வது மற்றும் 4 வது பிரதிவாதிகள்

மேற்கோள் : நீதிமன்ற உத்தரவு நாள் : 02.03.2026

பணமோசடித் தடுப்பு (சொத்து மீட்பு) விதிகள் 2016, விதி 3A-இன் கீழான அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிப்பது யாதெனில், கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள சொத்து/சொத்துக்கள் **31.07.2018** நாளிட்ட ஆணை எண் 10/2018-இன்படி அமலாக்க இயக்குநரகத்தால் முடக்கப்பட்டன. மேலும், குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்ட பிறகு இவ்வழக்கின் குற்றவியல் நடைமுறைகள் தற்பொழுது விசாரணைக் கட்டத்தில் உள்ளன.

இந்நிலையில், கோயம்புத்தூர் இந்தியன் வங்கியின் SAM கிளை மேலாளர் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களின் மீது தமக்கு முறையான உரிமை உள்ளது என்றும் கணிசமான அளவில் தாம் இழப்பைச் சந்தித்துள்ளதாகவும் கூறி அச்சொத்துக்களை மீட்கும் பொருட்டு, பணமோசடித் தடுப்புச் சட்டம் 2002, பிரிவு 8, உட்பிரிவு (8)-இன் கீழ் Crl.M.P.எண் 24845/2024 கொண்ட விண்ணப்பத்தைத் தாக்கல் செய்துள்ளார். இதையடுத்து, சென்னையிலுள்ள மாண்பமை PMLA முதன்மை அமர்வு நீதிமன்றம் மற்றும் சிறப்பு நீதிமன்றத்தின் நீதிமன்ற நடைமுறைக்கு இணங்க Crl.M.P.எண். 24845/2024 மீதான **02.03.2026** நாளிட்ட அன்றாட உத்தரவின்படி, இந்தப் பொது அறிவிப்பு இரண்டு நாளிதழ்களில் வெளியிடப்படுகிறது.

எனவே, காலஞ்சென்ற உரிமையாளர்களின் சட்டப்படியான வாரிசுதாரர்கள் முதற்கொண்டு யாருக்காவது இது குறித்து ஏதேனும் மறுப்பு இருந்தாலோ கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் மீது ஏதேனும் முறையான பாத்தியதை, உரிமை, உடைமை இருந்து அது தொடர்பாக அவர்கள் உரிமை கோர விரும்பினாலோ, இந்த அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அவர்கள் தங்களின் உரிமைகோரலை / மறுப்பை உரிய ஆதார ஆவணங்களுடன் (நல்ல நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையிலும் நடந்த குற்றத்தில் தங்களுக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையிலும்) இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு உத்தரவிடப்படுகிறது.

குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் எந்தவொரு மறுப்பும் / உரிமைகோரலும் வரப்பெறாவிட்டால், அன்னார் இல்லாமலே இது குறித்து முடிவு எடுக்கப்படும். மேலும், இந்தச் சொத்தில் வேறு யாருக்கும் எந்த உரிமையும் இல்லை என்று கருதப்படும்.

சொத்து அட்டவணை (அசையாச் சொத்துக்கள்)

வ. எண்	சொத்தின் விவரம்	ஆவண எண் மற்றும் மதிப்பு	தற்போதைய வழிகாட்டி மதிப்பு
1.	தொழிலக நிலம், பரப்பளவு ஏக்கர் 12.85, SF எண் 452/1, ஒட்டியன்காடு, நல்லூர் கிராமம், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம்.	ஆவண எண் 463/1995-இன்படி வாங்கப்பட்ட 6.50 ஏக்கர், இது K.பாஸ்கரன் அவர்களின் பெயரில் நல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப் பட்டது. மேலும், ஆவண எண் 464/1995-இன்படி 6.35 ஏக்கர், இது K.உமாசங்கர் அவர்களின் பெயரில் நல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. மொத்தக் கொள்முதல் மதிப்பு: ரூ.1,28,500/-	காலி நிலம் ஏக்கர் ஒன்றுக்கு வழி காட்டி மதிப்பு ரூ.7,50,000/- வீதம் 12.85 ஏக்கருக்கான மொத்த மதிப்பு ரூ.96,37,500/-
2.	தொழிலக நிலம், பரப்பளவு ஏக்கர் 3.11, SF எண் 433/4A, 4B, 4C, 4D, நல்லூர் கிராமம், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம். தொழிலக நிலம், பரப்பளவு ஏக்கர் 2.61.1/2, SF எண் 433/3B, 433/6, 434/1A, 1B, 1C, 1D, 2C, 434/1E, நல்லூர் கிராமம், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம்	ஆவண எண் 166/1995, ஆவண எண் 167/95, ஆவண எண் 182/95 ஆகியவற்றின்படி வாங்கப்பட்ட 3.11 ஏக்கர் பாவை அலாய்ஸ் அண்டு ஸ்டீல்ஸ் பிரைவேட் லிமிடெட் எனும் பெயரில் பரமத்தி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. மேலும், ஆவண எண் 2867/2007, ஆவண எண் 2868/2007, ஆவண எண் 2869/2007, ஆவண எண் 474/1996 ஆகியவற்றின்படி 2.61.1/2 ஏக்கர் பாவை அலாய்ஸ் அண்டு ஸ்டீல்ஸ் பிரைவேட் லிமிடெட் எனும் பெயரில் பரமத்தி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. மொத்தக் கொள்முதல் மதிப்பு: ரூ.2,60,600/-	காலி நிலம் ஏக்கர் ஒன்றுக்கு வழி காட்டி மதிப்பு ரூ.4,00,000/- வீதம் மொத்த மதிப்பு ரூ.22,90,000/-
3.	காலிக் குடியிருப்பு மனை, பரப்பளவு ஏக்கர் 3.76, SF எண் 88/1A, 90/1B, சேலம் முதன்மைச் சாலை, 48, கைலாசம்பாளையம் கிராமம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.	1. ஆவண எண் 807/1980-இன்படி வாங்கப்பட்ட 1.00 ஏக்கர் V.குப்புசாமி அவர்களின் பெயரில் திருச்செங்கோடு சார்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. 2. ஆவண எண் 1720/1980-இன்படி வாங்கப்பட்ட 0.15 ஏக்கர் M.பழனியம்மாள் அவர்களின் பெயரில் திருச்செங்கோடு சார்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. 3. ஆவண எண் 1910/1979-இன்படி வாங்கப்பட்ட 1.12 ஏக்கர் மற்றும் 1721/1980-இன்படி வாங்கப்பட்ட 0.25 ஏக்கர் என இரண்டு ஆவணங்களும் காலஞ்சென்ற பாவாயம்மாள் அவர்களின் பெயரில் திருச்செங்கோடு சார்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டன. 14.07.2000 நாளிட்ட சட்டப்படியான வாரிசு சான்றிதழின்படி திரு.V.குப்புசாமி அவர்களே இதன் சட்டப்படியான ஒரே வாரிசுதாரர். 4. ஆவண எண் 297/1980-இன்படி வாங்கப்பட்ட 1.24 ஏக்கர் M.பழனியம்மாள் அவர்களின் பெயரில் திருச்செங்கோடு சார்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. மொத்தக் கொள்முதல் மதிப்பு: ரூ.1,06,000/-	காலி நிலம் ஏக்கர் ஒன்றுக்கு வழி காட்டி மதிப்பு ரூ.35,00,000/- வீதம் 3.76 மொத்த மதிப்பு ரூ.1,31,60,000/-
4.	குடியிருப்பு நிலம், பரப்பளவு 2183.25 சதுர அடி, SF எண் 88/1B1, பட்டா எண் 383, சேலம் முதன்மைச் சாலை, 48, கைலாசம்பாளையம் கிராமம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.	ஆவண எண் 1880/1979-இன்படி வாங்கப்பட்ட 2183.25 சதுர அடி V.குப்புசாமி அவர்களின் பெயரில் திருச்செங்கோடு சார்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. மொத்தக் கொள்முதல் மதிப்பு: ரூ.15,000/-	காலி நிலம் ஒரு சதுர அடிக்கு வழி காட்டி மதிப்பு ரூ.1,200/- வீதம் மொத்த மதிப்பு ரூ.26,19,900/-
5.	தொழிலக நிலம், பரப்பளவு ஏக்கர் 4.26, SF எண் 433/3A, 3B, 433/5, 6, நல்லூர் கிராமம், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம்.	ஆவண எண் 434/2008-இன்படி வாங்கப்பட்ட 1.91 ஏக்கர் மற்றும் ஆவண எண் 412/2008-இன்படி வாங்கப்பட்ட 2.35 ஏக்கர் ஆகியவை பாவை அலாய்ஸ் அண்டு ஸ்டீல்ஸ் பிரைவேட் லிட்., எனும் பெயரில் பரமத்தி சார்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டன. மொத்தக் கொள்முதல் மதிப்பு: ரூ.5,94,000/-	காலி நிலம் ஏக்கர் ஒன்றுக்கு வழிகாட்டி மதிப்பு ரூ.4,00,000/- வீதம் மொத்த மதிப்பு ரூ.17,04,000/-
6.	தொழிலக நிலம், பரப்பளவு ஏக்கர் 0.95, SF எண் 453/2, நல்லூர் கிராமம், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம்.	ஆவண எண் 53/1996-இன்படி வாங்கப்பட்ட 0.95 ஏக்கர் K.உமாசங்கர் அவர்களின் பெயரில் பரமத்தி சார்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. மொத்தக் கொள்முதல் மதிப்பு: ரூ. 8,100/-	காலி நிலம் ஒரு சென்ட்டுக்கு வழிகாட்டி மதிப்பு ரூ.6,00,000/- வீதம் 0.95 ஏக்கருக்கான மதிப்பு ரூ.5,70,000/-
7.	தொழிலக நிலம், பரப்பளவு ஏக்கர் 1.73, SF எண் 434/2B, நல்லூர் கிராமம், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம்.	ஆவண எண் 206/1995-இன்படி வாங்கப்பட்ட 1.73 ஏக்கர் V.குப்புசாமி அவர்களின் பெயரில் பரமத்தி சார்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. மொத்தக் கொள்முதல் மதிப்பு: ரூ.32,005/-	காலி நிலத்தின் வழிகாட்டி மதிப்பு ரூ.4,00,000/- வீதம் 1.73 ஏக்கருக்கான மொத்த மதிப்பு ரூ.6,92,000/-

நாள் : 26.09.2026 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : கோயம்புத்தூர் இந்தியன் வங்கி, SAM கிளை, கோயம்புத்தூர்.

பள்ளியைச் சுற்றி தேங்கியுள்ள மழைநீரை அகற்றக் கோரி சாலை மறியல்

சாலை மறியலில் ஈடுபட்ட கிராம மக்கள்.

எடப்பாடி, செப். 29: கொங்கணாபுரம் அருகே அரசு பள்ளியைச் சுற்றி தேங்கிய மழை நீரை அகற்றக் கோரி கிராம மக்கள் சாலை மறியலில் செவ்வாய்க்கிழமை ஈடுபட்டனர்.

கொங்கணாபுரம் ஒன்றியத்துக்கு உள்பட்ட கச்சுபள்ளி கிராமத்தில் அரசு மாதிரி பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. மழைக் காலங்களில் இங்குள்ள பிரதான சாலைகள் மற்றும் பள்ளி, குடியிருப்புகளைச் சுற்றி மழைநீர் அதிக அளவில் தேங்கி விடுவதால், இப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்புக்குள்ளாகிறது.

மேலும், இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் ஆபத்தான முறையில் பள்ளிக்கு வந்து செல்லும் சூழல் ஏற்படுகிறது. இதுகுறித்து பல முறை மனு கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையாம்.

இந்நிலையில் கடந்த திங்கள்கிழமை இரவு பெய்த கனமழையால் இப்பகுதியில் உள்ள பள்ளி மற்றும் குடியிருப்புகளில் மழைநீர் குளம் போல் தேங்கியது. இதனால் சங்ககிரி - ஓமலூர் பிரதான 4 வழிச்சாலையில் அப்பகுதி கிராம மக்கள் செவ்வாய்க்கிழமை சாலை மறியலில் ஈடுபட்டனர்.

தகவல் அறிந்து வந்த கொங்கணாபுரம் போலீஸார் மற்றும் வருவாய் துறை அலுவலர்கள் கிராம மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி விரைவில் பிரச்னைக்கு தீர்வு காணப்படும் என உறுதி அளித்தனர். அதையடுத்து, கிராம மக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இந்த சாலை மறியலால் சங்ககிரி - ஓமலூர் பிரதான சாலையில் சுமார் ஒருமணி நேரத்துக்கு மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

பெரியார் பல்கலை.யில் வணிகவியல் பேராசிரியர்களுக்கு புத்தாக்கப் பயிலரங்கம்

புத்தாக்கப் பயிலரங்கைத் தொடங்கிவைத்து பேசிய துணைவேந்தர் நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.ஜெயந்தி.

ஓமலூர், செப். 29: பெரியார் பல்கலைக்கழகம் சார்பில், நான்கு மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளைச் சேர்ந்த வணிகவியல் பேராசிரியர்களுக்கான புத்தாக்கப் பயிலரங்கம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பெரியார் பல்கலைக்கழக வணிகவியல் துறை மற்றும் இந்திய நிறுவன செயலாளர்களுக்கான அமைப்பு இணைந்து பேராசிரியர்களுக்கான புத்தாக்கப் பயிலரங்கை நடத்தியது. பெரியார் பல்கலைக்கழக வணிகவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கே.கிருஷ்ணகுமார் வரவேற்றார். துணைவேந்தர் நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ். ஜெயந்தி புத்தாக்கப் பயிலரங்கைத் தொடங்கிவைத்தார்.

நிகழ்வில், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தால் கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள சவால்கள், புதிய வாய்ப்புகள், சிறந்த நடைமுறைகள் என்ற தலைப்பிலும், நிறுவனச் செயலாளர்கள் துறையில் மாணவ - மாணவிகளுக்கான வேலைவாய்ப்புகள் என்ற தலைப்பிலும் பயிற்சி அளிக்கப்பட்டது.

இதில், சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளைச் சேர்ந்த வணிகவியல் துறை பேராசிரியர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். பயிற்சி பெற்றவர்களுக்கு, பதிவாளர் வை.ராஜ் சான்றிதழ்களை வழங்கினார்.

மேட்டூர் நகராட்சியில் நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை

மேட்டூர், செப். 29: மேட்டூர் நகராட்சியில் தனியார் தொண்டு நிறுவனத்துடன் இணைந்து நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சையை நகராட்சி நிர்வாகம் செய்து வருகிறது.

மேட்டூர் நகராட்சியில் மக்கள் அதிகம் கூடும் மேட்டூர் அணை பூங்கா, அணைக்கட்டு முனியப்பன் கோயில், மேட்டூர் பேருந்து நிலையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பொது மக்களுக்கும், குழந்தைகளுக்கும் அச்சுறுத்தலாக ஏராளமான நாய்கள் சுற்றித் திரிகின்றன.

இந்த நாய்களைக் கட்டுப்படுத்த கோரிக்கை விடுத்ததையடுத்து, மேட்டூர் நகராட்சிப் பகுதியில் 564 நாய்கள் இருப்பதாக கணக்கீடு செய்யப்பட்டது. இவற்றைக் கட்டுப்படுத்த தனியார் தொண்டு நிறுவனத்துடன் இணைந்து மேட்டூர் நகராட்சி நிர்வாகம் நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்துவருகிறது.

மேட்டூர் நகராட்சி ஆணையர் சபாநாயகம் உத்தரவின் பேரில், செவ்வாய்க்கிழமை வரை 195 நாய்களுக்கு இந்த அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. அறுவை சிகிச்சை செய்யப்படும் நாய்கள் 3 நாள்கள் மருத்துவக் கண்காணிப்பில் வைக்கப்பட்டு, பின்னர் அவை பிடித்த இடங்களில் மீண்டும் விடப்படுகின்றன.

'மறைந்த கிராம உதவியாளர்களின் வாரிசுக்கு அரசு வேலை வழங்க வேண்டும்'

மாநாட்டில் பேசிய சங்கத்தின் சேலம் மாவட்டச் செயலாளர் தங்கராஜ்.

சங்ககிரி, செப். 29: மறைந்த கிராம உதவியாளர்களின் வாரிசுக்கு அரசு வேலை வழங்க வேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது.

சங்ககிரி வட்ட வருவாய் கிராம ஊழியர் சங்கத்தின் 3-ஆவது வட்டக் கிளை மாநாடு மற்றும் புதிய நிர்வாகிகளுக்கான தேர்தல் சங்ககிரி கிராம நிர்வாக அலுவலர் சங்க கட்டட வளாகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

சங்ககிரி வட்டாரத் தலைவர் பி.ஆண்டிமுத்து தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் தங்கராஜ் மாநாட்டைத் தொடங்கிவைத்து, கிராம ஊழியர் சங்கத்தின் நோக்கம், செயல்பாடுகள் குறித்தும், தமிழக அரசிடம் வைத்துள்ள கோரிக்கைகள் மற்றும் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் விளக்கிப் பேசினார்.

மாவட்ட துணைத்தலைவர் ரமேஷ், மாவட்ட இணைச் செயலாளர் பி.சுசீந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில தணிக்கையாளர் முருகேசன், கிராம வருவாய் கிராம ஊழியர் சங்கத்தின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இம்மாநாட்டில், தமிழக அரசு காலமான கிராம உதவியாளர்களின் குடும்பத்தினரின் வாரிசுக்கு அரசு வேலை வழங்க வேண்டும், கிராம உதவியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட கால முறை ஊதியம் வழங்க வேண்டும், அரசு ஊழியர் அட்டவணையில் 'டி' பிரிவில் இணைக்க வேண்டும், 2023 ஆம் ஆண்டு பணியில் சேர்ந்த கிராம உதவியாளர்களுக்கு சிபிஎஸ் எண் வழங்கி, சிபிஎஸ் பிடித்தம் செய்து ஊதியம் வழங்க வேண்டும், கிராம உதவியாளர்களின் பணித்தன்மையை வெளியிட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புதிய நிர்வாகிகள் தேர்வு: சங்ககிரி வட்டாரத் தலைவராக பி.ஆண்டிமுத்து, செயலாளராக எம்.செல்வராஜ், பொருளாளராக கே.தனபாலன், துணைத் தலைவர்களாக பி.சண்முகம், பிரவீன்குமார், துணைச் செயலாளராக செல்வராஜ், செயற்குழு உறுப்பினர்களாக சத்தியபிரியா, தீனதயாளன் உள்ளிட்டோர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர்.

ஏற்காட்டில் கார் கவிழ்ந்து விபத்து: பயணிகள் தப்பினர்

ஏற்காட்டில் விபத்துக்குள்ளான கார்.

ஏற்காடு, செப். 29: சேலம் மாவட்டம், ஏற்காட்டுக்கு சுற்றுலா வந்த கார் செவ்வாய்க்கிழமை கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

காஞ்சிபுரம் மாவட்டம், சிவதாபுரம் கிராமத்தைச் சேர்ந்த ராஜு, குடும்பத்துடன் காரில் ஏற்காட்டுக்கு திங்கள்கிழமை சுற்றுலா வந்தார்.

விடுதியில் தங்கி ஏற்காட்டில் பல்வேறு இடங்களைக் கண்டு மகிழ்ந்த அவர்கள், செவ்வாய்க்கிழமை ஏற்காடு பேருந்து நிலையத்திலிருந்து ஒண்டிக்கடை படகு இல்லத்துக்கு காரில் சென்றனர்.

அப்போது ஓட்டுநர் ராஜுவின் கவனக்குறைவால் சாலைத் திட்டில் மோதி கார் கவிழ்ந்தது. இதில், ராஜுவுக்கு சிறுகாயம் ஏற்பட்டது. தகவல் அறிந்த ஏற்காடு ரோந்து காவல் துறையினர் காரில் இருந்தவர்களை மீட்டனர். இது குறித்து ராஜுவிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

நில அளவையருக்கு மிரட்டல்: விவசாயி கைது

தம்மம்பட்டி, செப். 29: தம்மம்பட்டி அருகே நிலத்தை அளவீடு செய்த சர்வேயருக்கு கொலை மிரட்டல் விடுத்த நபரை போலீஸார் திங்கள்கிழமை கைது செய்தனர்.

தம்மம்பட்டி அருகே உலிபுரத்தைச் சேர்ந்தவர் விவசாயி சரவணன் (50). இவரது நிலத்துக்கும், அதையொட்டி உள்ள தனியார் பள்ளி நிர்வாகத்துக்கும் இடையே பாதை தொடர்பான பிரச்னை இருந்தது. எனவே, அந்த நிலத்தை அளவீடு செய்து கொடுக்கும்படி, தனியார் பள்ளி சார்பில் ஆத்தூர் நீதிமன்றத்தில் மனு அளிக்கப்பட்டது.

நிலத்தை அளவீடு செய்து தரும்படி வருவாய்த் துறை மற்றும் போலீஸாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டதையடுத்து, கெங்கவல்லி வட்டார அலுவலகத்தில் நில அளவையராக பணிபுரியும் வேலூர் மாவட்டம், நெமிலியைச் சேர்ந்த வசந்தகுமார் (34) நிலத்தை அளவீடு செய்தார்.

பின்னர், அவரை கைப்பேசியில் தொடர்புகொண்ட சரவணன், பள்ளிக்கு ஆதரவாக நிலத்தை அளவீடு செய்து கொடுத்துள்ளதாகக் கூறி, அவருக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

புகாரின்பேரில், சரவணன் மீது பல்வேறு பிரிவுகளில் தம்மம்பட்டி போலீஸார் வழக்குப் பதிவுசெய்து அவரை திங்கள்கிழமை கைதுசெய்து சேலம் மத்திய சிறையில் அடைத்தனர்.

எடப்பாடி நகர்மன்றக் கூட்டம்

காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த அதிமுகவினர் கோரிக்கை

எடப்பாடி, செப். 29: எடப்பாடி நகராட்சி நகர்மன்றக் கூட்டத்தில், காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த அதிமுகவினர் கோரிக்கை விடுத்தனர்.

எடப்பாடி நகர்மன்றக் கூட்டம் தலைவர் டி.எஸ்.எம் பாஷா தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. ஆணைய ரமேஷ் (பொ) முன்னிலை வகித்தார்.

இதில், நகராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வடிகால் அமைப்புகள், தெருவிளக்கு, பராமரிப்பு, குடிநீர் விநியோகம் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளின் கீழ் உறுப்பினர்களின் விவாதம் நடைபெற்றது.

தொடர்ந்து, அதிமுக உறுப்பினர்கள் தங்கள் வார்டு பகுதியில் போதிய அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படுவதில்லை எனவும், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் உடனடியாக அந்தப் பகுதிகளை ஆய்வுசெய்து பொது மக்களின் அடிப்படை வசதிகளை சீரமைத்து தர வேண்டுமென கோரிக்கை விடுத்தனர்.

தொடர்ந்து பேசிய நகர்மன்ற எதிர்க்கட்சித் தலைவர் (அதிமுக) ஏ.எம் முருகன், தற்போது எடப்பாடி நகராட்சிப் பகுதியில் பரவலாக காய்ச்சல் பாதிப்புகள் இருப்பதால், காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முழு அளவில் மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

அதற்கு பதில் அளித்து பேசிய நகர்மன்றத் தலைவர் பாஷா, நகராட்சிப் பகுதியில் காய்ச்சல் தடுப்பு சுகாதார நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும் எனவும், முதல்கட்டமாக அரசின் டாம் கால் நிறுவனத்திடமிருந்து சுமார் 100 கிலோ அளவிலான நிலவேம்பு பவுடர்கள் கொள்முதல் செய்யப்பட்டு, நகராட்சியின் 30 வார்டு பகுதிகளிலும் பொதுமக்களுக்கு நிலவேம்பு குடிநீர் விநியோகம் செய்யப்படுவதுடன், அடிப்படை சுகாதார வசதிகள் மேம்படுத்தப்படும் என்றார். பின்னர், 61 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

உலக இதய தினம்: காவேரி மருத்துவமனை சார்பில் மாரத்தான் ஓட்டம்

சேலம் மகாத்மா காந்தி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மாரத்தான் ஓட்டத்தை தொடங்கிவைத்த சேலம் மண்டல வனப் பாதுகாவலர் எஸ்.கலாநிதி.

சேலம், செப். 29: உலக இதய தினத்தை முன்னிட்டு, சேலம் காவேரி மருத்துவமனை சார்பில் மகாத்மா காந்தி விளையாட்டு மைதானத்தில் மாரத்தான் ஓட்டம் அண்மையில் நடைபெற்றது.

இதய ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நடத்தப்பட்ட இந்த ஓட்டத்தில், 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். இதில் 21.1 கி.மீ. மற்றும் 10 கி.மீ. மாரத்தான் இடம்பெற்றன.

21.1 கி.மீ. மாரத்தான் போட்டியை சேலம் மண்டல வனப்பாதுகாவலர் எஸ்.கலாநிதி கொடியசைத்து தொடங்கி வைத்தார். 21.1 கி.மீ. மற்றும் 10 கி.மீ. பிரிவுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மொத்தம் சுமார் ரூ. 2.5 லட்சம் பரிசுத்தொகை பகிர்ந்து அளிக்கப்பட்டது.

அனைத்து வயதுடைய ஆண்கள், பெண்கள் மற்றும் மாணவ, மாணவிகளை ஒன்றுதிரட்டிய இந்த நிகழ்வு, உடற்பயிற்சி மற்றும் இதய பராமரிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது.

இந்நிகழ்ச்சியில் சேலம் காவேரி மருத்துவமனையின் பிரிவு இயக்குநர் வி.செல்வம் பேசுகையில், இதய ஆரோக்கியம் என்பது நம் அன்றாட வாழ்வில் சுறுசுறுப்பாக இருப்பதை பொருத்து அமைகிறது. 'உங்கள் ஆரோக்கியமான இதயத்துக்காக ஓடுங்கள்' என்ற இலக்கோடு நடைபெற்ற இந்த மாரத்தான் மூலம் இதய ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த நாங்கள் முயன்றுள்ளோம் என்றார்.

இளைஞர் அடித்துக் கொலை: உறவினர் கைது

வெங்கடேஷ்

ஆத்தூர், செப். 29: தும்பல் ஊராட்சியில் இளைஞரை அடித்துக் கொன்ற அவரது உறவினரை ஏத்தாப்பூர் போலீஸார் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியத்துக்குள்பட்ட தும்பல் ஊராட்சி மின்வாரிய அலுவலகம் அருகே வசிப்பவர் சேட்டு (78). இவரது மகள் வழி பேரன் விமல் (29).

இவரது மகன்வழி பேரனான வெங்கடேஷ் (36), சொத்தை பிரித்து தருமாறு சேட்டுவிடம் கடந்த 22-ஆம் தேதி தகராறு செய்துள்ளார். அப்போது, அங்கிருந்த குச்சியை எடுத்து சேட்டை தாக்க முயன்றாராம். தாத்தாவின் மீது அடி விழாமல் இருக்க தடுத்த விமல் தாக்கப்பட்டார். இதில் படுகாயமடைந்த விமல் பெத்தநாயக்கன் பாளையம், ஆத்தூர் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இந்நிலையில், சிகிச்சை பலனின்றி 27-ஆம் தேதி விமல் உயிரிழந்தார்.

இதுகுறித்து ஏத்தாப்பூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து, வெங்கடேஷை தேடி வந்த நிலையில் செவ்வாய்க்கிழமை அவரை கைது செய்து சேலம் மத்திய சிறையில் அடைத்தனர்.

மது அருந்த பணம் தராததால் பாட்டியைக் கொன்ற பேரன் கைது

சேலம், செப். 29: சேலம் கொண்டலாம்பட்டி பகுதியில் மது அருந்த பணம் தராததால், ஆத்திரத்தில் பாட்டியைக் கொலை செய்த பேரன் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார்.

சேலம் கொண்டலாம்பட்டி பெரிய புதூர் பகுதியைச் சேர்ந்தவர் பழனியம்மாள் (80). இவர் கணவர் ரங்கசாமி உடன் திங்கள்கிழமை இரவு வீட்டில் இருந்தபோது, மதுபோதையில் வந்த பேரன் விஜி (34) மது அருந்த பணம் கேட்டதாகக் கூறப்படுகிறது.

அப்போது, பழனியம்மாள் தன்னிடம் பணம் இல்லை என கூறியதால் ஆத்திரமடைந்த விஜி, அவர் அணிந்திருந்த முக்கால் சவரன் தங்க நகையை பறித்துக் கொண்டு அவரை கட்டையால் தாக்கியுள்ளார். இதைத் தடுக்க வந்த ரங்கசாமியையும் விஜி தாக்கினாராம். இதில் இருவரும் படுகாயம் அடைந்தனர். இந்நிலையில், பழனியம்மாள் செவ்வாய்க்கிழமை காலை வீட்டில் இறந்து கிடந்தார்.

தகவலின்பேரில் வந்த கொண்டலாம்பட்டி காவல் ஆய்வாளர் சங்கீதா மற்றும் போலீஸார் பழனியம்மாளின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். படுகாயம் அடைந்த ரங்கசாமி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து, விஜியை கைது செய்த போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.